

திருவள்ளூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை மற்றும் மிக்ஜாம் புயல் காரணமாக பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம், யமுனா நகர், நஷ்ரத்பேட்டை, சென்னீர்குப்பம் ஆகிய பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ள பகுதிகளையும் அவ்வெள்ளநீரை மோட்டார் மூலமாக விரைந்து வெளியேற்றும் பணிகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, அப்பணிகளை துரிதமாக மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மை செயலாளர் பி.செந்தில்குமார், வேளாண்மை துறை சிறப்பு செயலாளர் முனைவர்.பொ.சங்கர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் பொன்னையா மாவட்ட ஆட்சியர் டாக்டர்.த.பிரபுசங்கர் திட்ட அலுவலர் என்.ஒ.சுகபுத்திரா, ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ், ஒன்றிய குழு பெருந்தலைவர் எம்.ஜெயக்குமார் உள்பட அரசு அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட, வேளச்சேரி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணை பகுதி மக்களுக்கு 5வது நாளாக நேற்றும் (9.12.2023) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 1/2 லிட்டர் பால் பாக்கெட் 8000, பிஸ்கெட் 16000, சுவீட் பன் 5000, சேமியா, ரவா 500, கோதுமை 5500, அரிசி 5கிலோ பேக் 3000, அரிசி 4 கிலோ பேக்500, அரிசி 2 கிலோ பேக் 7500, வாட்டர் பாட்டில்1000, கைலி 10000, போர்வை14000, டவல்3800, சேலை1500, நைட்டி 3500, குழந்தைகள் துணி 500, பாய் 5000 மற்றும் மருந்துப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு 9000 ஆகிய நிவாரணப் பொருட்கள், சுமார் 20 லாரிகளில் கொண்டு சென்று நேரில் வழங்கினார்.

# பொருள் கொண்டோர் அருள் கூர்க!

## கவிப்பேரரசு வைரமுத்து உருக்கம்!

‘தண்ணீர் தண்ணீர்
எங்கணும் தண்ணீர்
குடிக்கத்தான் இல்லை ஒரு துளி'
எனும் ஆங்கிலக் கவிதை
நினைவின் இடுக்கில் கசிகிறது

வீட்டுக்குத் தண்ணீர் இல்லை
என்பது சிறுதுயரம்
வீட்டுக்குள்ளேயே தண்ணீர்
என்பது பெருந்துயரம்

விடியும் வடியும் என்று
காத்திருந்த
பெருமக்களின் துயரத்தில்
பாதிக்கப்படாத நானும்
பங்கேற்கிறேன்

என் கடமையின் அடையாளமாக
முதலமைச்சரின்
பொது நிவாரண நிதிக்கு
ஒரு லட்ச ரூபாய் வழங்குகிறேன்

பொருள்கொண்டோர்
அருள்கூர்க



சக மனிதனின் துயரம்
நம் துயரம்

இடர் தொடராதிருக்க
இனியொரு விதிசெய்வோம்;
அதை எந்தநாளும் காப்போம்

– கவிப்பேரரசு
**வைரமுத்து**





சென்னையில் நேற்று (09.12.2023) மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட குடியிருப்பு பகுதி பொதுமக்களுக்கு தோட்டக்கலைத் துறையின் சார்பில் நடமாடும் வாகனங்கள் மூலம் மலிவு விலையில் காய்கறிகள் விற்பனையை வேளாண்மை –உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் காய்கறிகளை பார்வையிட்டு கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த நிகழ்வின்போது வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் முனைவர் ச.நடராசன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர்.பிருந்தாதேவி மற்றும் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



நேற்று (09.12.2023) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர், சி.வி.கணேசன் சென்னை பெருநகர மாநகராட்சிக்குட்பட்ட 15வது மண்டலம், சோழிங்கநல்லூர் 193,195,196 மற்றும்196A ஆகிய வட்டத்திற்கு உட்பட்ட மக்களுக்கு தலா 1000 எண்ணிக்கையில் போர்வை மற்றும் உணவுப் பொருட்களை அனுப்பி வைத்தார்.

# இந்தியாவில் இருந்து வெளிநாட்டு நிறுவனங்கள் வெளியேறுவது ஏன்?

## மக்களவையில் கனிமொழி கருணாநிதி கேள்வி

புதுடெல்லி, டிச.10-

இந்தியாவில் இருந்து வெளிநாட்டு நிறுவனங்கள் வெளியேறுவது ஏன்? அதை தடுக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று மக்களவையில் கனிமொழி எம்.பி. கேள்வி எழுப்பினார். மக்களவையில் தி.மு.க. எம்பி கனிமொழி கருணாநிதி எழுப்பிய கேள்வியில், “இந்தியாவில் இருந்து வெளிநாட்டு நிறுவனங்கள் வெளியேறுவது அதிகரித்திருப்பது ஏன். 2018ம் ஆண்டு 102 வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் தொடங்கப்பட்டன. ஆனால் அதே வருடத்தில் 111 வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் தங்கள் செயல்பாடுகளை நிறுத்தி விட்டனர்.



குறிப்பாக கோவிட் தொற்றுக்குப் பிறகு பல வெளிநாட்டு நிறுவனங்கள் சீனாவுக்குச் செல்ல தயங்குகிற நிலையில் கூட, நாம் அவர்களுக்கு ஏற்ற வணிகச் சூழலை அமைத்துத் தந்துள்ளோம். அதனால் இதுகுறித்து எடுத்த நடவடிக்கை என்ன” என கேட்டிருந்தார்.

இதற்கு பதிலளித்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், “வெளிநாட்டு வணிக நிறுவனங்கள் இந்தியாவில் தங்களது கிளை அலுவலகத்தையோ, திட்ட அலுவலகத்தையோ, தொடர்பு அலுவலகத்தையோ, அல்லது தங்களின் பிரதிநிதிகள் அலுவலகத்தையோ தொடங்கலாம்.

இதற்கு பாரத ரிசர்வ் வங்கியின் விதிமுறைகள் மற்றும் அரசின் பிற துறைகளின் விதிமுறைகளை அவர்கள் பூர்த்தி செய்ய வேண்டும். இது போன்ற வெளிநாட்டு நிறுவனங்களின் அலுவலகங்கள் இந்தியாவில் தொடங்கப்பட்ட 30 நாட்களுக்குள் அந்த நிறுவனங்கள் கம்பெனி பதிவாளரிடம் (டெல்லி, அரியானா) கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 380ன் கீழ் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து பதிவுச் சான்றிதழ் பெற வேண்டும் என எழுத்துப் பூர்வமாக தெரிவித்தார்.

# இயற்கைப் பேரிடரிலிருந்து மக்களை மீட்போம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, டிச. 10–**

**இயற்கைப் பேரிடரிலிருந்து மக்களை மீட்போம் என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அவரது வேண்டுகோள் வருமாறு:-

மிக்ஜாம் புயல் – கனமழை ஏற்படுத்திய வரலாறு காணாத பேரிடரால் சென்னை – காஞ்சிபுரம் – திருவள்ளூர் – செங்கல்பட்டு மாவட்டங்களில் ஒரு கோடிக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### அமைச்சர்கள் நிவாரண உதவிகளை வழங்குகிறார்கள்!

முதலமைச்சர் அவர்கள் – மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் – அரசு அதிகாரிகள் – கழக நிர்வாகிகள் – இளைஞர் அணியினர் – கழக உடன்பிறப்புகள் என அனைவரும் களத்தில் இறங்கி மக்களுக்கான நிவாரண உதவிகளைச் செய்து வருகின்றனர்.

கடந்த டிசம்பர் 3–ஆம் தேதி நள்ளிரவு முதல் தற்போது வரை நானும் தொடர்ந்து களத்தில் நின்று வெள்ள பாதிப்பு தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு – மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்கி வருகிறேன்.



குறை கூறுவதற்காக மட்டுமே தலையை வெளியே காட்டும் எதிர்க்கட்சிகளுக்கு மத்தியில், மக்களுடன் நிற்பதும் –அவர்களைப் பேரிடரிலிருந்து மீட்பதுமே நமது தலையாயப் பொறுப்பு. ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளுக்குச் செவிமடுத்தும் – வன்மத்துடன் வருகின்ற விமர்சனங்களை எதிர்கொண்டும் மக்களுக்கான உதவிகளை, நம் கழகத்தினர் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

### மக்களுடன் நின்று பணியாற்றும் கழகத்தினர்!

இந்த மாபெரும் மீட்பு – நிவாரணப் பணிகளின் காரணத்தால், சேலத்தில் வருகிற 17–ஆம் தேதி நடைபெறவிருந்த ‘மாநில உரிமை மீட்பு’ முழக்கமான நம் இளைஞர் அணியின் 2–வது மாநில மாநாட்டை, டிசம்பர் 24–ஆம் தேதி நடத்துவது, என்று தலைமைக் கழகம் அறிவித்திருக்கிறது.

### பாசிஸ்ட்டுகளிடமிருந்து நாட்டை மீட்க சேலம் மாநாடு!

இந்த அறிவிப்புக்கேற்ப இளைஞர் அணி மாநில மாநாட்டுக்கான பணிகளை ஒருங்கிணைக்க மாவட்டச் செயலாளர்கள் – இளைஞர் அணியின் மாநில – மாவட்ட – ஒன்றிய – நகர– பகுதி – பேரூர் நிர்வாகிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

இயற்கைப் பேரிடரிலிருந்து நம் மக்களை இப்போது மீட்போம் -10 ஆண்டு காலமாக பாசிஸ்ட்டுகள் ஏற்படுத்தி வரும் செயற்கைப் பேரிடரிலிருந்து நாட்டை மீட்க, டிசம்பர் 24 அன்று சேலத்தில் கூடுவோம்; இளைஞர் அணி மாநாட்டை வெற்றி பெறச் செய்வோம்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சிவகங்கை மாவட்டத்திலிருந்து சென்னைக்கு நிவாரணப் பொருட்கள்!

சிவகங்கை, டிச. 10-

சென்னையில் ஏற்பட்ட பெரும் புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிவகங்கை மாவட்டத்திலிருந்து நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

திருப்பத்தூர் ஒன்றிய குழு தலைவர் எஸ்.சண்முக வடிவேல் ஏற்பாட்டின் பேரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, பருப்பு. மளிகைப்பொருட்கள், எண்ணெய்வகைகள், குடிநீர் பாட்டில்கள், பிஸ்கட், வேஷ்டி, சேலை, போர்வை, போன்ற பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

கல்லல் ஒன்றிய குழு தலைவர்திருமதி சொர்ணம் அசோகன் ஏற்பாட்டின் பேரில் அரிசி, பருப்பு ,வேஷ்டி, சேலை, பிஸ்கட் பாக்கெட்டுகள், குடி தண்ணீர் பாட்டில், போர்வைகள் அனுப்பிவைக்கப்பட்டது. பொதுக்குழு உறுப்பினர் கரு.அசோகன், ஆணையாளர்கள் கலந்து கொண்டார்கள்.

வட்டாட்சியர் ராஜா ஏற்பாட்டின் பேரில் அரிசி, எண்ணெய்வகைகள், குடிநீர் பாட்டில்கள், பிஸ்கட் வேஷ்டி, சேலைபோர்வைகள் போன்ற பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

காளையார் கோவில். வட்டாட்சியர் ராஜரத்தினம் ஏற்பாட்டின் பேரில் அரிசி, மளிகைப் பொருட்கள், வேஷ்டி, சேலைகள், போர்வைகள், பிஸ்கட் பாக்கெட்டுகள் குடிநீர் பாட்டில்கள் அனுப்பி வைக்கப்பட்டது. மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் இருந்து வேன்கள் மூலம் சென்னைக்கு நிவாரண உதவிப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டது.



சென்னை, மயிலாப்பூர், ஆஸ்டின் நகர் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 கிலோ அரிசி, போர்வை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை மறைந்த சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் ஷீபா வாசு அவர்களின் மகள் திருமதி சாந்தி வாசு வழங்கினார். உடன் மயிலாப்பூர் கழக மகளிர் அணி துணை அமைப்பாளர் திருமதி கிருஷ்ணவேணி, திருமதி சித்ரா மற்றும் நிர்வாகிகள், கிரியேட்டர் நிறுவன இயக்குநர் மோகன்ராஜ் ஆகியோர் உள்ளனர்.